(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(4).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2009, யூலை 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2009, ஆகஸ்ட் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0267 / '09

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கனிப்பொருள் ஏற்றுமதியாளர்களுக்கு 2009 பெப்ருவரி 03 ஆம் திகதி இன்றகொன்டினன்டல் ஹோட்டலில் நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதன் நோக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்,

(iv) இக்கலந்துரையாடலில் பங்கேற்ற நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(v) உரிய கலந்துரையாடலுக்கு நிதி வழங்கியது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0082 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பஸ் கட்டணங்கள் அதிகரித்தமையால் 2008 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கமவின் வருமானம் 17,150 மில்லியன் ரூபா வரை அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இது ஸ்ரீலங்கமவின் முந்திய ஆண்டின் வருமானத்தைவிட 16.8 சதவீத அதிகரிப்பாகுமென்பதையும்,

(ii) பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையால் வருமானம் அதிகரித்துள்ள போதிலும் 2008 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கமவின் தொழிற்பாட்டு நட்டம் 3,554 மில்லியன் ரூபா வரை உயர்வடைந்துள்ளதென்பதையும் ,

(iii) மேற்படி நட்டம் முந்திய ஆண்டினைவிட 53.8 சதவீத அதிகரிப்பாகு மென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) மேற்படி அதிகளவு நட்டம் பெறக் காரணங்கள் யாவையென்பதையும் ,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0083 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008 ஆம் ஆண்டில் புகையிரதக் கட்டணங்களை அதிகரித்தமையால் மொத்த வருமானம் 3.671 மில்லியன் ரூபா வரை 22.4 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எனினும் இலங்கை புகையிரத சேவையின் தொழிற்பாட்டு நட்டம் 4.553 மில்லியன் ரூபா வரை 5.9 சதவீதத்தால் 2008 ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) புகையிரதக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையிளால் வருமானம் அதிகரித்துள்ளபோதிலும் இலங்கை புகையிரத சேவையின் நட்டம் அதிகரிக்க காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0432 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0058 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் உள்ள காணியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும்,

(i) வெளிநாட்டவருக்கு, கொம்பனிகளுக்கு, மற்றும் தனிப்பட்டவர்களுக்கு (அவர்களின் நாட்டின் பெயருடன்) வழங்கப்பட்ட காணிகளையும்,

(ii) அதற்குரிய நியதிகள் நிபந்தனைகள், அவற்றின் பெறுமதி மற்றும் வழங்கப்பட்ட காலம் ஆகியவற்றையும்

வெவ்வேறாக அவர் கூறுவாரா?

(இ) (i) தனியார்துறைக்குக் கையளிக்கப்பட்ட, மாற்றப்பட்ட, அல்லது குத்தகைக்கு விடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பெயர்களை அதற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடனும்,

(ii) அவை வழங்கப்பட்ட கால அளவையும்,

(iii) ஒப்பந்தத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஈ) இன்றேல், ஏன்?

0063 / ’09

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 01.01.2008 ல் அமுலுக்கு வந்ததும் வரவு செலவுத்திட்டத்தின் இலங்கையில் பதிவு செய்து கொள்வதனால், விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் நன்மைகள் வழங்கப்பட்டன என்பதைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 31.12.2007 வரை பதிவு செய்யப்பட்ட கம்பல்களையும் விமானங்களையும் வெவ்வேறாகவும்,

(ii) நன்மைகள் வழங்கப்பட்டதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட கம்பல்களினதும் விமானங்களினதும் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்

(iii) இதனால் வருமானத்தில் ஏற்பட்ட இழப்பினையும்,

(iv) “Flag of Convenience” நிர்வாகப் பதிவு செய்வதனால் எமக்கு கிடைத்த நன்மைகளையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) (i) நன்மைகள் வழங்கப்பட்ட பின்னர் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் விமானங்களின் உரிமையாளர்கள் மற்றும் அவைகளின் பங்காளர்கள்,

(ii) இதைவிட அதிகமான முன்னேற்றத்தினை அடைய முடியாமற் போனதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0402 / ’09

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இலங்கையில் உள்ள கைத்தொழில் குடியேற்றங்களின் எண்ணிக்கை

மற்றும் அவை எவை என்பதையும்,

(ii) ஒவ்வொரு கைத்தொழில் குடியேற்றங்களில் உள்ள கைத்தொழிற் சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) அவை வெவ்வேறாக எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆம் அண்டு ஆரம்பமாகும் போது இயங்கி வந்த மற்றும் தற்போது மூடப்பட்டுள்ள கைத்தொழில் சாலைகள் எவையேனும் உள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அவை எவை என்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இயங்கி வந்த மற்றும் தற்போது ஊழியர்கள் நீக்கப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள் இருக்கின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், அவை எவை என்பதையும்,

(v) மூடப்பட்ட கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அரசினால் ஏதேனும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(vi) நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தன விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஆகஸ்ட் 06, வியாழக்கிழமை)**

0381/ '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மகிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 21ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூல) பிரேரிக்கப்பட்டுள்ளவாறு "ஜனசெவன" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் 25 வீடுகள் வீதம் நிர்மாணிக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(அ) (i) ஒட்டுமொத்தமாக நாட்டினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை எந்த மாவட்டங்களில் எந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்,

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வீடுகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளும் கிராம சேவைப் பிரிவுகளும் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0433 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தளை மாநகர எல்லைக்குள் அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0434 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பல்லேகொல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0435 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாவுல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0436 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0437 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0438 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கலேவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0439 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஆகஸ்ட் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0003 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் தொழிற்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களின் எண்ணிக் கையையும்,

(ii) உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பினும் தொழிற்பாடு ஆரம்பிக்கப்படாதிருக்கும் தொலைக்காட்சி நிலையங்களுக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக் கையையும்,

(iii) அவர்களது ஒளிபரப்பின் அலைவரிசையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு உதவும் நோக்கத்துடன் வெளிநாட்டுத் தொலைக்காட்சித் திரைப்படங்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை அதைரியப்படுத்துவதற்காக அரசாங்கம் வரிகளை அறிமுகம் செய்ததை அவர் அறிவாரா?

(இ) (i) அது தனது குறிக்கோளை அடைந்து விட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எங்கே, எவ்வாறு இப்பயன்கள் அடையப்பெற்றன என்பதையும்,

(iii) வரிகள் விதிக்கப்பட்டது முதல் இற்றைவரை ஒவ்வொரு நிலையத்தினாலும் செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஈ) (i) இந்தத் தொலைக்காட்சி நிலையங்கள் மீது விதிக்கப்பட்ட ஏனைய வரிகளையும்,

(ii) கடந்த 12 மாதங்களில் அரசாங்கத்தினால் சம்பாதிக்கப்பட்ட தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0095 / ' 09

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2005,2006,2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி தேர்தலுக்கு முன் விளம்பரங்களை பிரசாரம் செய்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் மேற்படி நிறுவனம் ஒவ்வொரு அரசியல் கட்சியிடமிருந்தும், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்தும் ஈட்டியுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக அறவிடப்படவேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இது எந்த கட்சியிடமிருந்து, எந்த நிறுவனத்திடமிருந்து மற்றும் எந்த நபரினது பிரசார நடவடிக்கைகள் சார்பாக என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0186 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு,

(ii) நட்டமடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி நட்டத்தை இலாபமாக மாற்றும்பொருட்டு ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0187 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "மிஹின் லங்கா" விமான சேவைக்காக 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விமான சேவைக்கு மேலதிகமாக அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ள மற்றுமொரு விமான சேவை உள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எத்தனை,

(ii) அந்த விமானங்களின் பதிவிலக்கங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த வருடத்தில் மிஹின் லங்கா விமான சேவைக்குக் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0192 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குச் சொந்தமான கடற் பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்களென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எமது நாட்டுக் கடற் பரப்பில் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு உரிமை இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) மேற்படி மீன்பிடித்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0268 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு பெற்றோல் எறிபொருளுக்கான மாணியமொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதென்பதையும்,

(ii) இதற்கான சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய மாணியத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்வந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருந்த தென்பதையும்,

(iv) இதற்கான காரணம் மாணியத்தை கோருவதற்கு உள்ள சந்தர்ப்பத்தை குறைக்கும் வகையில் விண்ணப்பித்தில் முறைமை சிக்கல் படுத்தப் பட்டுள்ளமையாகும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இற்றைவரை கொழும்பு மாவட்டத்தில் பெற்றோல் மாணியத்திற்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மாணியத்தை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0067 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழேயே அரச ஒலிபரப்பு முகவர்களுக்கும், தனியார் கம்பனிகளுக்கும் தற்பொது ஒலிபரப்பிற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் ஒரு நிறுவனம் என்பதையும், எனவே ஒலிபரப்பு உரிமங்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் கீழ் வழங்குவது, ஏனைய உரிமைக்காரர்களுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் தீமையேற்படுத்தும் என்பதையும், இது ரீதியான வர்த்தகம், சம சந்தர்ப்பம் என்ற வகையில் கைச்சாத்தான உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்களுடன் முரண்படுகின்றது என்பதையும் அவர் அறிவாரா என்பதை குறிப்பிடுவாரா?

(இ) தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமங்கள் வழங்கப்படும் தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் இவ்வேற்பாடுகளை சட்டவலுவற்ற தாக்குவதற்கும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்திலோ அல்லது அதையொத்த ஒன்றிலோ இவ் ஏற்பாடுகளை மீள அறிமுகம் செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0105 / '09

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தேசிய ரூபவாஹிணி 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் தேர்தலுக்கு முந்திய பிரச்சார விளம்பரங்களை பிரச்சாரம் செய்ததென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இந்நிறுவனம் மேற்படி தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகள் மூலமாக ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது நிறுவனம் மற்றும் ஆட்களிடமிருந்து வருடாந்தம் ஈட்டிய பணத்தொகை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக எவ்வளவு பணத்தொகை அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்,

(iii) எக்கட்சியிடமிருந்து, நிறுவனத்திடமிருந்து, ஆளிடமிருந்து பிரச்சார நடவடிக்கைகளுக்காக இவ்விதமாக அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0385 / '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை மின்சார சபை எதிர்கொண்டுள்ள கடுமையான நிதி நெருக்கடிக்கு தீர்வாக லங்கா டிரான்ஸ் போமர்ஸ் லிமிட்டெட்டில் இலங்கை மின்சார சபைக்கு உரித்தான 63% பங்கினை விற்க அரசு தீர்மானித்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறெனின் இந்த பங்குகளை விற்கும் போது பகிரங்க கேள்விப்பத்திரம் மூலம் பங்குகளை விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இவ்வாறு தனியார் துறையினருக்கு பங்குகளை விற்பது மகிந்த சிந்தனைக்கு முரணானது அல்லவா எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஆகஸ்ட் 18, செவ்வாய்க்கிழமை)**

0066 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2008 ஆம் ஆண்டில் உள்ளவாறாக இலங்கையின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் அல்லது வாக்கெடுப்புப் பிரிவிலும் உள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் உள்ள,

(i) மொத்த சனத்தொகை,

(ii) ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதாசாரம்,

(iii) அவர்களின் வயதுப் பிரிவுகள்,

(iv) வாக்காளர்களின் சமய ரீதியான விகிதாசாரம், இன ரீதியான விகிதாசாரம்

ஆகியவற்றை அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஆகஸ்ட் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0193 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நன்னீர் மீன்பிடித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வள வென்பதையும்,

(ii) இறால் வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) "மிகின் எயார்" விமானச் சேவைக்காக 2009 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஆறாயிரம் மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை போதாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0207/ ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டதா என்பதையும்,

(ii) மேற்படி நிவாரணங்கள் யாவையென்பதையும்,

(iii) இந்நிவாரணங்கள் எப்போதிருந்து அமுல்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0208 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் எத்தனை வாவிகளிலும் நீர்த்தேக்கங்களிலும் மீன் வளர்ப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளதென்பதையும்,

(ii) மேற்படி வாவிகளும் நீர்த்தேக்கங்களும் யாவையென்பதையும்,

(iii) இவற்றில் வளர்க்கப்படும் மீன் இனங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி வாவிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0068 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC) சட்டத்தின் கீழேயே அரசாங்க ஒலிபரப்பு முகவர்களுக்கும் தனியார் கம்பனிகளுக்கும் வானொலி ஒலிபரப்பிற்கான உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் (SLBC) தற்போதைய இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதையும், வானொலி ஒலிபரப்பு உத்தரவுப்பத்திரங்களை தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் விநியோகிப்பதானது ஏனைய விண்ணப்பதாரிகளையும் உத்தரவுப் பத்திரங்களையும் ஓர் அனுகூலமான நிலைக்கு உள்ளாக்குவதுடன், நியாயமான வர்த்தகம் மற்றும் சமமான வாய்ப்புக்கள் போன்றவற்றைக் கருத்திற் கொள்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உலக வர்த்தக சங்க (WTO) மற்றும் ஏனைய சர்வதேச உடன்படிக்கைகள் மீறப்படுகின்றன என்பதையும் அவர் அறிவாரா?

(இ) வானொலி ஒலிபரப்பு உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்ற, தற்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளை நீக்குவதற்கும் இந்த ஏற்பாடுகளை தற்போதைய இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டம் அல்லது அது போன்றதொரு சட்டத்தின் கீழ் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0070 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 02 வருடங்களில் அமைச்சினால் வழங்கப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி என்பவற்றின் ஒளி மற்றும் ஒலிபரப்பிற்கான அனைத்து உரிமங்களினதும் விபரங்களை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வுரிமங்கள் கேள்விப்பத்திர அடிப்படையிலா வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) பின்பற்றப்பட்ட நடைமுறையையும்,

(iii) ஒவ்வொரு உரிம வழங்கலாலும் அரசிற்குக் கிடைத்த வருமானத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0256 / '09

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தற்பொழுது இயங்குகின்ற அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசாலைகள் என்பவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் அவற்றின் பெயர்கள் யாவை,

(iii) மேற் குறிப்பிட்ட அரசாங்க பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் என்பவற்றிற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இப்பொழுதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் இயங்கிய அரசாங்க பாடசாலைகள், பிரிவெனாக்கள் ஆகியவற்றில் தற்பொழுது மூடப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் எவ்வளவு,

(ii) அப்பாடசாலைகளும் பிரிவெனாக்களும் எந்த ஆண்டு மூடப்பட்டன,

(iii) அவை அவ்வாறு மூடப்பட்டதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) ஏதேனும் ஒரு காரணத்திற்காக மூடப்படவிருந்த பாடசாலைகளும் பிரிவெனாக்களும் மூடப்படுவதைத் தடுப்பதற்கு அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா,

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0266 / '09

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சிற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவை எத்தேவைகளுக்காக என்பதையும்,

(iii) மேற்படி கட்டிடங்களுக்காக மாதாந்தம் செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாரென்பதையும்,

(v) இவை எந்த வகையில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை, காலி வீதி 04 ஆம் இலக்க முகவரியில் அமைந்துள்ள கட்டிடம் எந்த நிறுவனத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இது எந்த ஆண்டிலிருந்தென்பதையும்,

(iii) அதன் மாதாந்த வாடகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0263 / ' 09

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சின் மூலம் "கஜ மித்துரோ" என்ற

பெயரில் கருத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா,

(ii) அக்கருத்திட்டத்தின் நோக்கம் யாது,

(iii) மின்சார வேலிகளை அமைப்பதற்காக "கஜ மித்துரோ" கருத்திட்டம் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கின்றது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய கருத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) வெவ்வேறாக அவை யாவை,

(iii) தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, அவை யாவை,

(iv) வெற்றிகரமாக முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு, அவை யாவை,

(v) இக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0264 / '09

கௌரவ பிமல் ரத்நாயக்க,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள மின்சார வேலி அமைக்கின்ற கருத்திட்டம் சம்பந்தமான தகவல்களை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு "கஜ மித்துரோ" கருத்திட்டத்தை ஒப்படைக்காமைக்கான காரணங்கள் யாவை ,

(ii) "கஜ மித்துரோ" கருத்திட்டத்தில் யானைகளுக்கான உணவு, நீர், உப்பு ஆகிய தேவைகளை பூர்த்திச் செய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளனவா ,

(iii) ஆமெனில் மேற்படி தேவைகளுக்காக சிறு குளங்களை அமைத்தல் குறித்த கருத்திட்டத்தினால் இணங்காணப்பட்டுள்ளதா,

(iv) இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை மற்றும் இற்றை வரை அமைக்கப்பட்டுள்ள சிறு குளங்களின் எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0378 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நெதர்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் முற்றிலும் நிறுதத்தப்பட்டுளளதாக அந்நாட்டு அமைச்சரொருவர் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளாரென்பதைஅவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி உதவிகளை நிறுத்துவதற்கான காரணம், இலங்கைக்குள் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள், சிவில் மக்களின் மரணங்கள் மற்றும் சட்டத்தின் உன்னதத் தன்மையை களங்கப்படுத்தல் என மேற்படி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) நெதர்லாந்து அரசாங்கத்துடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

---

## 2009, ஆகஸ்ட் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0071 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவினால் (TRCSL) கடந்த 02 வருடங்களில் வழங்கப்பட்ட எல்லா வானொலி அலைவரிசை (தொகுதிகளின்) விபரங்களை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்தத் வானொலி அலைவரிசை (தொகுதிகள்) உரிமங்கள் அரசாங்க ஆதனங்களை வழங்குவதற்கு விதித்துரைக்கப்பட்ட அரசாங்க கேள்விப்பத்திர நடவடிக்கைமுறைகளின் பிரகாரம் வழங்கப்பட்டனவா என்பதையும்; அத்துடன்,

(ii) ஒவ்வொரு அலைவரிசை (தொகுதிகள்) உரிமத்தையும் வழங்கியதன் மூலம் திரட்டப்பட்ட வருமானங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0073 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாராளுமன்றத்தால் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுகைகளுக்கான உச்ச வரம்புகளை 1948 இல் இருந்து 2000 வரைக்கும், 2000 இல் இருந்து 2005 வரைக்கும் 2006, 2007, 2008, 2009 ஆகிய ஆண்டுகளுக்கு தனித்தனியாகவும் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இக்காலப்பகுதிகளில் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் கடனாகப் பெறப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2005 — 2009 காலப்பகுதியில் மேலதிக செலவுகளை ஈடுசெய்ய ஈட்டப்பட்ட அரசாங்க வருமானத்தை ஆண்டு வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0074 / ' 09

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2000 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்கான

(i) மொத்த உண்ணாட்டு உற்பத்தியையும் (GDP) அதன் வளர்ச்சி வீதத்தையும்,

(ii) மொத்தக் கடன் மற்றும் தலா கடன் என்பவற்றையும்,

(iii) தொழிற் படையணி மற்றும் பணவீக்கத் தரவுகள் என்பவற்றையும்

வருடாந்த அடிப்படையில் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0218 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எந்தத் திகதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பிரகாரம் மேற்படி விஜயத்தை மேற்கொண்டாரா என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?:

(இ) (i) இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்திய தரப்புகள் மற்றும் அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) அது எத்திகதிகளில் என்பதையும்,

(iii) இந்திய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடிய விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0219 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளினதும், சிற்றுண்டிச் சாலையுடனான வண்டிகளினதும் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி புகையிரதப் பெட்டிகளும், சிற்றுண்டிச்சாலையுடனான வண்டிகளும் இந் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட திகதிகள் மற்றும் பயன்படுத்தப்படாமலுள்ளவற்றின் எண்ணிக்கை யாவையென்பதையும்,

(iii) இவற்றின் நிதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0182 / '09

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மிஹின் எயார் விமானக் கம்பனி எப்போது தாபிக்கப்பட்டது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மிஹின் எயார் விமானக் கம்பனியின் தலைவரின் பெயர், முகவரி மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட தலைவர் இப்பதவிக்கு யாரால் நியமிக்கப்பட்டார்;

(ii) அது எப்போது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0382 / ' 09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரசாங்கம் / இலங்கை மத்திய வங்கி கடந்த 2 ஆண்டு காலப்பகுதியில் தனியார் வங்கிகளிலிருந்து கடன் பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி கடன் பெறப்பட்ட வங்கிகளும், பெறப்பட்ட கடன் தொகையும் யாதென்பதையும்,

(ii) மேற்படி கடன் தொகையும், அதற்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நிதி நிர்வாகம் பற்றிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதால் மேற்படி தனியார் வங்கிகளிலிருந்து குறிப்பிட்ட கடன்களைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி பெறப் பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இல்லையெனில், மேற்படி கடனைப் பெறுவதன் மூலம் இலங்கையின் அரசியலமைப்பு மீறப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0282 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) யப்பானிய வெளிநாட்டு பொருளாதார சேவைகள் நிதியத்தினால் ரூபா. 256,914,765 செலவிடப்பட்டு புகையிரத வீதிகள் புனரமைப்புக்கான கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் இயந்திரங்கள் மன்றும் பொறித்தொகுதிகள் செயலிழந்த தனால் 2007 ஆம் ஆண்டு 253 நாட்கள் உற்பத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்து இருந்தது என்பதையும்,

(ii) இதன்படி 2007 இல் உற்பத்தி இலக்குகளில் 34% அளவு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) எனவே, ரூபா 33,808,358 பெறுமதியான கருங்கற்களை வெளிவாரி நபர்களிடமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிலைமையின் கீழ் குறிப்பிட்ட கருத்திட்டத்தினால் 2007 இல் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச்செலவு கொடுப்பனவுக்காக ரூபா. 4,457,356 செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதன்படி உற்பத்தியின் அளவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0283 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 யூலை மாதம் 14 ஆம் திகதிய 11/ 2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் படி தனிப்பட்ட விடயங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்களை பாவிக்க உரிமையற்ற புகையிரத திணைக்களத்தின் 16 உத்தியோகத்தர்கள் 2007 ஆம் ஆண்டு அறிக்கையின் படி வாகனங்கள் பாவிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய உத்தியோகத்தர்கள் யார் என்பதையும்,

(ii) பாவிக்கப்படும் வாகனங்கள் மற்றும் அவற்றின் பதிவு இலக்கங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0178 / '09

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— விளையாட்டுத்துறை, பொதுப்பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எமது நாட்டில் தற்போதுள்ள விளையாட்டுத்துறை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த பாடசாலைகள் வெவ்வேறாக மாகாண சபைகளுக்கு அல்லது மத்திய அரசாங்கத்துக்கு உரித்தாகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கல்வி அமைச்சினால் இந்த விளையாட்டுத:துறை பாடசாலைகளின் அபிவிருத்திக்காக விசேட திட்டம் ஏதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அல்லாவிடில், வேறு ஏதேனும் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான திட்டமொன்று இருக்கின்றதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அந்த திட்டங்கள் எது என்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுத்துறை பாடசாலைகள் எவை என்பதையும்,

(v) குறிப்பிட்ட பாடசாலைகள் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0189 / '09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இற்றைவரை வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் இந்நாட்டுத் துறைமுகங்களின் ஊடாக கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களின் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த தொகை யாது,

(ii) அதன் பெறுமதி எவ்வளவு,

(iii) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளிலிருந்து இவ்வாறு கொள்வனவு செய்த ஒரு கிலோகிறாம் மீனின் விலை யாது,

(iv) மேற்படி ஒரு கிலோகிறாம் மீனின் விற்பனை விலை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0222 / '09

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை வங்கியின் கொழும்பு டப்ரோபென் கிளையில் பேணப்படும் திறைசேரி கணக்கின் வங்கி மேலதிகப்பற்று 2005 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி, 2008 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி மற்றும் 2009 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வங்கி மேலதிகப்பற்று இவ்வளவு அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) வங்கி மேலதிகப் பற்று அதிகரிப்பதை தடுப்பதற்கு இதுவரை எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0060 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சுனாமியின் காரணமாக இறந்தவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) சுனாமியின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(iii) அரசாங்கத்தினால் மீள்நிர்மாணம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை என்னவென்பதை மாவட்ட அடிப்படையிலும்,

(v) 2005 சனவரி 01 முதல் இற்றை வரை ஒரு நாடு என்ற முறையல் குறிப்பாக சுனாமியின் நிமித்தம் நாம் பெற்றுக்கொண்ட மொத்த நன்கொடைகள், உதவிகள் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0080 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இரத்மலானை பழைய உணவுக் களஞ்சிய காணியிலுள்ள கட்டிடத்தில் அமைக்கப் பட்ட பொருளாதார நிலையத்தை அமைப்பதற்காக செலவிடப் பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு,

(ii) அவ்வாறு செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்தப் பிரிவுகளின் கீழ் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) பழைய உணவுக் களஞ்சிய கட்டிடத்திற்காகப் புதிதாகச் சேர்க்கப்பட்ட பிரிவுகள் யாவை,

(ii) பழைய கட்டிடத்தின் பகுதிகள் அகற்றப்பட்டுள்ளனவா,

(iii) அவ்வாறு அகற்றப்பட்டிருந்தால், இரும்பு உள்ளிட்ட ஏனைய பாகங்களுக்கு என்ன நடந்தது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0081/ '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை நிருவாக சேவையில் II / II ஆந் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2004/2005 என போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டதா,

(ii) ஆமெனில், எத்தேதியில்,

(iii) தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையும் எவ்வளவு,

(v) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு எவ்வளவு,

(vi) ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நியமனங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மற்றும் சேவையை விட்டு விலகியவர்களால் ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு இரண்டாம் சுற்றுக்கு விண்ணப்பதாரிகளை அழைக்க நடவடிக்கை எடுக்காமைக்கு காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0085 / ’09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) சுயாதீன (ஐ.ரீ.என்.) தொலைக்காட்சி நிருவனத்தினால் ஒலிபரப்பப்படுகின்ற “ துலாவ “ அரசியல் நிகழ்ச்சி 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஏப்பிரல் 30 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மொத்தமாக எத்தனை தடவைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சியில் கலந்துரையாடல்களின் பொருட்டு குறிப்பிட்ட காலகட்டத்தில் பங்குபெறச் செய்துள்ள அரசியல் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) உத்தியோகத்தர் மட்டத்தில் பிரதிநிதித்துவபபடுத்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) ஏனைய துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) குறிப்பிட்ட காலகட்டத்தில் அரசியல் கட்சி ரீதியாக பங்குபற்றியுள்ள அரசியல் பிரதிநிதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) ஆகக் கூடுதலான தடவைகள் பங்குபற்றியவர்களின் அடிப்படையில், நபர்கள் ரீதியாக எத்தனை தடவைகள் நிகழ்ச்சிகளை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

0289 / ’09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான திட்டப்பட இலக்கம் 11, உகுவெல பிரதேச செயலாளர் பிரிவின் ரத்வத்தை - கட்டுதெனியவத்தை எனும்

காணி, கே. டீ. செனவிரத்ன என்பவருக்கு மதிப்பிடப்பட்டதொரு பணத்தொகைக்கேற்ப சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. செனவிரத்னவிற்குச் சொந்தமான இக்காணிக்குரிய நுழைவுப் பாதையை அமைத்துக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த காணிப் பகுதியில் பிரதேச சபையினால் நீர் தாங்கியொன்று அமைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) இதன் காரணமாக இப்பாதையை பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தற்போது சனசமூக நிலையத்திற்கும் சுகாதார நிலையத்திற்கும் இடையேயுள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிப்பகுதியை திரு. செனவிரத்னவிற்கு மாற்று வழியாக பயன்படுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0442 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் தம்புல்ல தேர்தல் தொகுதியில் இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

### (2009, ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை)

0443 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் ரத்தொட்ட தேர்தல் தொகுதியில்

இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0444 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 ஆம் திகதியன்று மாத்தளை மாவட்டத்தில் லக்கல தேர்தல் தொகுதியில் இருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவர்கள் பெற்ற நிதித் தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் சாரும் குழுக்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பெறுநர் மத்தியில் வறுமை குறைந்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?